

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 69 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 01 – புதன்கிழமை 18 அக்டோபர் 2023 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 69 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 01 - Wednesday 18 October 2023 - Dak 12 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.10.2023) "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காகச் செல்லும் வழியில், செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள வருகை பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி உதயா கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.10.2023) "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காகச் செல்லும் வழியில், செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு வருகை தந்துள்ள பொதுமக்களிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி உதயா கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 'கள ஆய்வில் முதலமைச்சர்' திட்ட ஆய்வுக்குச் செல்லும் வழியில் காட்டாங்கொளத்தூர்

# ஒன்றிய அலுவலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு!

## பொதுமக்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க உத்தரவு!

**செங்கல்பட்டு, அக். 18 - "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்குச் செல்லும் வழியில் காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.**

மாவட்டங்களுக்குச் சென்று நிர்வாகப் பணிகளையும், வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளையும் நேரடியாக ஆய்வு செய்யும் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதன் முறையாக வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து 1.2.2023 மற்றும் 2.2.2023 ஆகிய தேதிகளில் வேலூர் மாவட்டத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 15.2.2023 மற்றும் 16.2.2023 ஆகிய தேதிகளில் சேலம் மாவட்டத்திலும், மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை மற்றும் தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக 5.3.2023 மற்றும் 6.3.2023 ஆகிய தேதிகளில் மதுரை மாவட்டத்திலும், விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 26.4.2023 மற்றும் 27.4.2023 ஆகிய தேதிகளில் விழுப்புரம் மாவட்டத்திலும், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 25.8.2023 மற்றும் 26.8.2023 ஆகிய தேதிகளில் நாகப்பட்டினத்திலும் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

**காட்டாங்கொளத்தூர் ஒன்றிய அலுவலகத்தில் ஆய்வு!**

அதன் தொடர்ச்சியாக நேற்று (17.10.2023) செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு செல்லும் வழியில், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வருகை தந்துள்ள பொதுமக்களிடம் அவர்களது கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார். மேலும், பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து அங்குள்ள அலுவலர்களிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து, அலுவலகத்தின் வருகை பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகளை ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**குடிநீர் பிரச்சினைக்கு முன்னுரிமை!**

இந்த ஊராட்சியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 66 மையங்களில் சுமார் 5000 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு தரமான உணவினை உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் அறிவுறுத்தினார். மேலும், இந்த ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்திட வேண்டும் என்றும், குடிநீர் விநியோகப் பணிகள், பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டடங்களை சீரமைத்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

தொடர்ந்து, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு கல்வி உதவித்தொகை வேண்டி விண்ணப்பித்த மாணவியிடம், முதலமைச்சர் அவர்கள் "புதுமைப் பெண்" திட்டத்தின் கீழும் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் திருமதி உதயா கருணாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

> **முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் 66 மையங்களில் சுமார் 5000 மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு தரமான உணவினை உரிய நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.**

---

### மத்திய பிரதேசம் தேர்தல்:

## காங்கிரஸ் கட்சி தேர்தல் அறிக்கை!

### கமல்நாத் வெளியிட்டார்!

*போபால், அக். 18 - மத்திய பிரதேசம் மாநில சட்டசபை தேர்தல் நவம்பர் 17ம் தேதி நடைபெற உள்ளது. ஆட்சியைக் கைப்பற்றுவதில் காங்கிரஸ், பா.ஜ.க. கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.*

*இதற்கிடையே, 230 சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் முதல் கட்ட வேட்பாளர்களின் பட்டியலை காங்கிரஸ் கட்சி சமீபத்தில் அறிவித்தது.*

*இந்நிலையில், தலைநகர் போபாலில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் முதல் மந்திரியும், மாநில தலைவருமான கமல்நாத் தேர்தல் அறிக்கையை நேற்று வெளியிட்டார்.*

*500 ரூபாய்க்கு கியாஸ் சிலிண்டர், பள்ளி மாணவர்களுக்கு இலவச கல்வி, பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்துவது, வேலையில்லா இளைஞர்களுக்கு உதவித்தொகை உள்பட பல்வேறு வாக்குறுதிகளை அளித்துள்ளது.*

---

### சிறை கைதிகள் விடுதலை: 49 கோப்புகளுக்கு

## ஆளுநர் இன்னும் ஒப்புதல் வழங்காமல் நிலுவையில் வைத்துள்ளார்!

### சட்டத்துறை அமைச்சர் ரகுபதி குற்றச்சாட்டு!

சென்னை, அக். 18 - 2023-2024ம் கல்வி யாண்டில் தமிழ்நாட்டில் உள்ள 11 அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ள 21 முதுநிலை பாடப்பிரிவுகளுக்கு 420 இடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இந்நிலையில், தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதுநிலை சட்டப் படிப்பில் சேருவதற்கான, தரவரிசைப் பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்த மாணவ, மாணவியர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.

தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவ, மாணவியருக்கும் மின்னஞ்சல் மூலம் ஒதுக்கீடு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ரகுபதி, நீண்டகால சிறைவாசிகள் விடுதலை தொடர்பாக 49 கோப்புகள் ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், இன்னும் ஒப்புதல் வழங்காமல் நிலுவையில் வைத்திருப்பதாக தெரிவித்தார்.

இந்த கோப்புகளில் ஆளுநர் கையெழுத்து போடமாட்டார் என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கூறியது பற்றிய செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், ஆளுநரும் அண்ணாமலையும் ஒன்றுதான் என்று மீண்டும் நிரூபித்து இருப்பதாக விமர்சித்தார்.

கேள்வி: நீண்ட கால சிறைவாசிகளை விடுதலை செய்ய தமிழக அரசு அனுப்பிய கோப்புகளுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்கமாட்டார் என்று தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கூறி இருக்கிறாரே?

பதில்: அதாவது ஆளுநரும், அண்ணாமலையும் ஒன்று என்பதை அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவ்வளவுதான். ஆளுநர் தான் அண்ணாமலை. அண்ணாமலைதான் ஆளுநர்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

### அக்.24ம் தேதி அன்று

## அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயங்கும்!

*சென்னை, அக். 18 - அக்டோபர் 24ம் தேதி விஜயதசமி அன்று அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு பணி காரணமாக செவ்வாய் விடுமுறை அளிக்கப்படும் நிலையில், அக்டோபர் 24ல் வழக்கம் போல் இயங்கும் என வண்டலூர் நிர்வாகம் அறிவித்துள்ளது.*

*விஜய தசமியை முன்னிட்டு அக்டோபர் 24ம் தேதி செவ்வாய் அன்று வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இயங்கி வருகிறது. இங்கு வார நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் ஏராளமானோர் குடும்பத்துடன் வந்து செல்கின்றனர்.*

*இந்தியாவின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா வண்டலூர் உயிரியல் பூங்காவாகும்.*

*உலகின் பல்வேறு பகுதியில் இருந்து இந்தப் பூங்காவைச் சுற்றிப் பார்க்க ஆண்டுதோறும் 20 லட்சம் பார்வையாளர்கள் வருகை தருகின்றனர் என அதன் நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*